# இன்று மாபெரும் மேதின பேரணி

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 18 இதழ் 86
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 01 - 5 - 1995

(யாழ்ப்பாணம்)
உலகத் தொழிலாளர் தினமாகிய மே நாள் பேரணியும் மாபெரும் கூட்டமும் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் சந்தியிலிருந்து நண்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி காங்கேசன்துறை வீதியூடாக நாச்சிமார் கோவிலடிக்கு வந்து அங்கிருந்து இராமநாதன்வீதியூடாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை சென்றடையும். பின்னர் அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மே நாளுக்கான ஏற்பாடுகள் கோட்ட, வட்ட ரீதியாக

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மேதினப் பேரணிகளை ரத்துச்செய்யகோரிக்கை

(கொழும்பு)
மேதினத்தையொட்டி தென் பகுதியில் இன்று ஏற்பாடு செய்யப்பட்ட சகல ஊர்வலங்களையும் இரத்துச் செய்யும்படி அரசாங்கம் சகல அரசியல்கட்சிகளுக்கும் அவசர வேண்டுகோள்விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அரசாங்கம் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள துக்ககரமான சூழ்நிலையில் படையினருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஊர்வலங்களை[illegible]யும் நடாத்த வேண்

(7ம் பக்கம் பார்க்க)

## ★ நேற்றுக் காலை

# தொண்டமானாற்றுப் பகுதியில் சுப்பசொனிக் திடீர் தாக்குதல்

## - ஏழு பேர் படுகாயம்; பல வீடுகள் சேதம் -

(வடமராட்சி, நெல்லியடி)

**தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய பகுதியில் நேற்றுக்காலை இரு சுப்பசொனிக் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஏழு பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய கிழக்கு றோட்டிலும் தொண்டமானாறு பிள்ளையார் கோவிலடியிலும் நிகழ்ந்துள்ளது.

நேற்று காலை 9.30 மணியளவில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்குள் திடீரென நுழைந்த சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள் வல்வை தொண்டமானாறு செல்வச்சந்நிதி வெம்பாடு என்னும்பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது மூன்று குண்டுகளை வீசித்தாக்கி விட்டு மின்னல் வேகத்தில் மறைந்

(7ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியிலும் சுப்பசொனிக் நோட்டம்

(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பகுதியில் வானின் அதி உயரததில் பறந்து சுப்பசொனிக் நோட்டமிட்டதால் நேற்றுக்காலை 8-30 மணியளவில் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வானின் அதி உயரத்தில் பறந்து நோட்டமிட்ட சுப்பசொனிக் பின் கரையோரப் பகுதியால் மின்னல் வேகத்தில் பறந்துசென்று மறைந்துவிட்டது.

சுப்பசொனிக்கின் பேரிரைச்சலையடுத்து சாவகச்சேரி பஸ் நிலையம் மற்றும் சந்தைப் பகுதியில் கூடிநின்றோர் பாதுகாப்புத்தேடி ஓடி ஒளிந்தனர்.

(155-சி)

## அமைச்சரவை, பாதுகாப்புச் சபை சந்திரிகா தலைமையில் கூடியது

(கொழும்பு)
நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா நேற்று அமைச்சரவையையும், பாதுகாப்புக் கவுன்சிலையும் கூட்டி நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஜனாதிபதி சந்திரிகா, வடக்கு-கிழக்கு நிலைமை குறித்தும் அமைச்சர்களுடன் பல மணி நேரம் கலந்துரையாடினார்.

இதேபோன்று பாதுகாப்புக் கவுன்சிலைக் கூட்டிய ஜனாதிபதி சந்திரிகா, விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதால் நாட்டின் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பின்னடைவு குறித்துப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை மற்றும் முப்படைத் தளபதிகள்,

(7-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிப்பு

(கொழும்பு)
மே தினத்தையொட்டி கொழும்பின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் படையினரின் சோதனை நடவடிக்கைகள் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள் போடப்பட்டு சகல வாகனங்களும் மிகத் தீவிரமான சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் கோட்டை ரயில் நிலையத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு அங்கு வரும்

(7ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவி சர்வதேச நாடுகள் வழங்கும்?

(கொழும்பு)
விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கும், அவர்களை வெற்றிகொள்வதற்கும் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசுக்குத் தெற்காசிய நாடுகள், அணிசேரா நாடுகள் மற்றும் மேற்கு நாடுகள் இராணுவத் தளபாடங்கள் உட்பட உடனடித் தேவைகளை நிறைவேற்ற முன்வந்துள்ளன எனவும் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

(7ம் பக்கம் பார்க்க)

## பதினொரு நாளில் 175 படையினர் பலி

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் கடந்த 11 நாட்களில் மேற்கொண்ட தாக்குதலில் 175 படையினர் கொல்லப்பட்டதுடன் 50க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர்.

திருமலையில் 'ரணசுறு', 'சூரியா' கப்பல் தகர்ப்பில்

(7-ம் பக்கம் பார்க்க)

தமிழன்னையின் விலங்கொடித்து, தமிழீழம் அமைத்து எம் சுதந்திரத்தை நிலைநாட்டுவோம்!
1995 மே நாளில் சபதம் எடுப்போம்.
சோபனா நகை மாடம்
116, V கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# திருமலை ஆத்திமோட்டை கிராமத்தில் தமிழர் வீடுகள் படையினரால் அழிப்பு!

(திருமலை)

திருகோணமலை ஆத்திமோட்டை கிராமத்தில் தமிழர்களின் வீடுகள் படையினரால் புல்டோசர்களால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுகிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தமிழர்கள் வாழும் இந்தக் கிராமத்திற்கு புல்டோசர்களில் வந்த படையினர் திடீர் திடீரென 14க்கும் மேற்பட்ட வீடுகளை இடித்துத் தள்ளினர்,

தமது வீடுகள் இடித்ததற்கான காரணம் எதுவும் தெரியவில்லை என்று இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டதினால்இருப்பிட வசதிகளின்றி இந்தக் கிராமத்திலுள்ள தமிழ் மக்கள் பெரும் சரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்,

தமிழர்களை ஆத்திமோட்டைக் கிராமத்திலிருந்து விரட்டும் நோக்குடனே அவர்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதாக தெரிய வருகிறது. இச்சம்பவம் தொடர்பாக அரசுக்கு புகார் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

திருமலைப் பகுதியிலிந்து இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும், வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ள மக்களை மீளக் குடியேற்றும் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளையில் மறுபுறத்தில் ஏற்கனவே திருமலை மாவட்டத்தில் குடியிருக்கும் தமிழர்களை வெளியேற்றும் நடவடிககைகளும் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. ரி

# கசிப்பு உற்பத்தி செய்த இருவர் கைது

(ஆனைப்பந்தி)

கசிப்பு உற்பத்தி செய்துகொண்டிருந்த இருவர் காவல் துறையினரிடம் கையும்மெய்யுமாக பிடிபட்டுள்ளனர்.

சென்ற திங்கள்இரவு கொக்குவில் பகுதியில் இருவர் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்தபோது சிக்கிக் கொண்டனர்.

இவர்களிடமிருந்து ஆறுலீற்லர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (101)

## நேர்முக பரீட்சை பெறுபேறு கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்தில் வைத்தியசாலை மேற்பார்வையாளர், காவலாளிகள் காரியாலய உதவியாளர்கள், சாதாரண தொழிலாளர்கள், சமையல்காரர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய திணைக்கள ஊழியர்களுக்கு இதுவரை அதன் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையில் நடாத்தப்பட்ட இந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், ஆனல் இதுவரை அங்கிருந்து இப்பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றிய நியமனக் கடிதங்கள் எதுவும் யாழ் சுகாதார திணைகளத்திற்கு வந்துசேரவில்லை என்றும் இது பற்றி யாழ் , சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். -72

## மீன்பிடி தடையால் கரையோரப்பகுதி மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளான கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் நாவாந்துறை ஆகிய பகுதிகளை சேர்ந்த நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் கடல் வலயத் தடைச் சட்டத்தினல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்,

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது மேற்படி கரையோரப் பகுதிகளை சேர்ந்த நாலாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன் பிடித் தொழிலையே தமது பிரதான தொழிலாக ஈடுபட்டு வந்தார்கள்.

சிறிலங்கா அரசினல் அண்மையில் அமுல்படுத்தப்பட்ட முழுமையான கடல் வலயத் தடைச் சட்டத்தினல் மீனவர் கடலில் சென்று தமது தொழிலில் ஈடுபடமுடியாதுள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள், மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மீனவர் நிவாரணமும் ஒழுங்காக கிடைப்பதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. -162-ரி

## மீனவர் பிரிவுகளில் இளைப்பாற்று மண்டபம்

(வடமராட்சி]

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பருத்தித்துறை மீனவர் பிரிவுகளில் இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பிரிவான ஆதிகோவிலடியில் எண்பத்தையாயிரம் ரூபா செலவில இளைப்பாற்று மண்டபமும், சுப்பர் மடம், இன்பருட்டி ஆகிய பகுதிகளால் மலசல கூடமும் அமைப்புக்கான நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான செயல்பாடுகள் ஆரம்பிக்கப்டுள்ளதாக வடமராட்சி வடக்கும் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மேற்படிதிட்டத்தைச்செயல் படுத்துவதில் வடமராட்சிப் பிரதேச செயலகம் திரு. ஆ. சிவசாமியும் வடமராட்சி கடற்தொழில் பரிசோதகர் திரு. ந. கணேச மூர்த்தியும் ஈடுபட்டுள்ளனர். -51

## பலாலி முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

நேற்று முன் தினம் காலை 6 மணி முதல நீண்ட நேரமாக மாதகல், பலாலிமுகாம்களிலிருந்து பண்டத்தரிப்பு, சுழிபுரம், பொன்னலை, தொல்புரம் முதலான இடங்களை நோக்கி இராணுவத்தினர் பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

காலை 10 மணி முதல் 12 மணி வரை பலாலி முகாமிலிருந்து வந்து கொண்டிருந்த உலங்குவானூர்தி சங்கானை. சித்தங்கேணி, தொல்புரம், பண்டத்தரிட்பு, பனிப்புலம் முதலான இடங்களில் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதலினல் பிளவத்தையைச் சேர்ந்த இரண்டு பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியதையடுத்து யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வப்பட்டனர். பிற்பகல் 2 மணியளவிலும் பலாலியிலிருந்து வந்த உலங்குவானூர்தி ஒன்று சங்கானை, சித்தன்கேணி சங்கரத்தை, வட்டுக்கோட்டை முதலான இடங்களை வட்டமிட்டு நோட்டமிட்டதோடு கலிபர் தாக்குதல்சளையும் மேற்கொண்டது. 139-சி-ரி

## சுகாதார அமைச்சிலிருந்து தனிச் சிங்களத்தில் சுற்று நிருபம்

பண்டத்தரிப்பு)

கொழும்பில் உள்ள சுகாதாரத் திணைக்களத் தலைமையகம் முக்கிய சுற்றுநிருபங்களைத் தனிச் சிங்களத்தில் வெளியிட்டு வருகின்றது.

ஒருசில சுற்றுநிருபங்களே ஆங்கிலம், தமிழ் மொழி பெயர்ப்புக்களுடன் அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

தாதி உத்தியாகத்தர்கள் சம்பளமற்ற லீவில் இரண்டு வருட காலம் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வதற்குச் சுகாதார அமைச்சு ஏற்கனவே வழங்கிய சலுகையை, இனி மேல் ஐந்து வருட காலமாக அதிகரிப்பது பற்றிய புதிய சுற்றுநிருபம் தனிச் சிங்களத்தில் மாத்திரமே அண்மையில்

(7ம் பக்கம் பார்க்க)

படைகளை விலக்கிப் பாதையைத்திற
தடையின்றி எங்கள் பயணத்தைச் செய்ய
தேசியத் தலைவரின் தலைமையில் மே நாள்
பேரணியில் அணி திரள்வோம்!
எரிக் கணேஷ் 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நேசக்கரத்தை நீட்டிய தலைவன்
பாதையில் நாமென அறிவாய்
அடக்கிட முனையலாம்
அடங்கிட நினையோம்
மே நாள் பேரணியில் கடலலையென
திரண்டு வாரீர்!
ஸ்ரீ லங்கா புத்தகசாலை அன் அச்சகம்
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## நகைகள் திருடியவர் கைது

(ஆனைப்பந்தி)

நகைகள் திருடிய நபர் ஒருவர் காவல் துறையினரால கைது செய்யப்பட்டார்.

யாழ்.நகரிலுள்ள வீடொன்றிலிருந்து சங்கிலி, கால் கொலுசுகள் என்பவற்றைத் திருடிய நபரே கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் திருடிய நகைளின் பெறுமதி சுமார் 9500ரூபா என்றும் யாழ். காவல்துறையினர் தெரிவித்தனர். 101

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–05–01
திங்கள் இரவு

08-02 தளிர்கள்- சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 தாயகப் பாடலகள்
08-30 செய்திகள்
08-40 உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்சசி- வேலணையூர் சுரேஸ் எழுதிய ''உரிமையின் குரலாய் ஒலிக்கட்டும்''

1995–5–02
செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07 30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடலகள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–05–01
திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதயவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்கு சிலவினடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06 20 என்தெரிவு
06-30 மாலை நிழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

மேதினம் எம்மினத்தின் விடுதலை உணர்வை வெளிப்படுத்தும்
பேரெழுச்சித் தினம்! அணிதிரள்வோம்!!
சிறி நதியா நகைமாடம்
2G, ஸ்ரான்லி வீதி
(அர்ச்சுன வீதி)
யாழ்ப்பாணம்

## மேநாளில்

# உலகெங்கும் ஓங்கி ஒலிக்கும் தமிழீழத்தின் உரிமைக்குரல்

மனித உரிமைகள் மறுக்கப்படுகின்ற, அடிமை வாழ்விலிருந்து விடுதலையடையப் போராடுகின்ற, அரச ஒடுக்குமுறைகளை எதிர்க்கின்ற மக்கள் இன்று உலகெங்கும் மே தினம் கொண்டாடுகின்றனர்,

மனித அடிமைத்தனம் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மிகப் பயங்கரமாக இருந்தது. அன்று தினமும் 18—20 மணித்தியாலங்கள் தொழிலாளரிடமிருந்து வேலை பெறப்பட்டது, அதனை எதிர்த்து தொழிலாளர்கள் போர்க்குரல் எழுப்பினர். 1806ம் ஆண்டு பில்டெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உலகின் முதற் தொழிற் சங்கம் இங்கே தோன்றியது. இரண்டாண்டுகளுக்குப் பின்னரே இங்கிலாந்தில் தொழிற் சங்கங்கள் தோன்றின.

பில்டெல்பியா இயக்கத்துக்கு தலைமை தாங்கியவர்கள் மீது சதிக் குற்றம் சுமத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

1820—30 களில் வேலை நேரத்தை குறைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் பல இடங்களில் முன் வைக்கப்பட்டன. முதலில் பத்துமணி நேர வேலைக் கோரிக்கையை தொழிலாளர்கள் வென்றெடுத்தனர். அதனைத் தொடர்ந்து எட்டு மணிநேரக் கோரிக்கை எழுந்தது. உலகெங்கும் பரந்த இக்கோரிக்கை மேதினம் தோன்றுவதற்கு காரணமாயிற்று

1866 மேதினம் எட்டு மணிநேர இயக்கத்தின் உச்சக் கட்டத்தை அடைந்தது. அமெரிக்கத் தொழிலாளரின் போராட்ட வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்திய ஊர்வலம் சென்ற தொழிலாளர் தாக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டனர். அப்போராட்டம் மறுநாளும் தொடர்ந்தது, மே மூன்றும் நாள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை பொலிஸ்படை தாக்கி அடக்கியது. அதனை எதிர்த்து அடுத்த நாள் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வெடித்த குண்டுக்கு ஒரு இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார். தொடர்ந்த தாக்குதலில் ஏழு பொலிசாரும் நான்கு தொழிலாளரும் கொல்லப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர்.

1875ல் வேலைநிலைறுத்தத்தில் ஈடுபட்ட பென்சில்வேனிய சுரங்கத் தொழிலாளர்கள் பத்துப்பேர் தூக்கிலிடப்பட்டனர். சைபீரியாவில், 1912 ஏப்பிரலில், வேலைநிறுத்தம் செய்த தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதும் பொஸ்ரன் நகரில் மேதின ஊர்வலத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் பால்டி மோரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர் கொடுரமாகத் தாக்கப்பட்டதும் இன்ன பிறவும் மேதின வரலாற்றிலுள்ள மறக்க முடியா அத்தியாயங்கள்.

1890ம் ஆண்டில் பல ஐரோப்பிய நாடுகளில் மேதினம் கொண்டாடப்பட்டது. அடக்கு முறையையும் எச்சரிகையையும் மீறி மேதினம் கொண்டாடப்பட்டது. அமெரிக்காவில், சிகாகோவிலும், நியூயோர்க்கிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத் தக்கவை.

ஜார் மன்னர் ஆட்சியை ஒழிக்கும் இயக்கத்துக்கு ரஷ்யாவில் மேதினம் பயன்படுத்தப்பட்டது. அங்கு நடந்த மேதின ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் வேலைநிறுத்தங்களும் புரட்சிகர பிரகடனங்களும் புதிய சூழ்நிலைக்கு ரஷ்யாவை இட்டுச் சென்றன.

1917ல் புரட்சி வெற்றி பெற்றவேளை மேதினம் அங்கே வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கைத் தீவில் தொழிலாளரிடையே நிலவிய ஒற்றுமை 1956ல் எழுந்த இனவாதப் புயலிலும் சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டத்திலும் சிக்கிச் சிதைந்தது. தமிழ்த் தொழிலாளரின் உரிமைகளுக்கு குரல் கொடுக்க தொழிற் சங்கங்கள் மறந்தன. மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோன்றின. தமிழ்த் தொழிலாளர்கள் தமக்கெனத் தொழிற் சங்கங்களை அமைத்துக்கொண்டனர். அதே போன்று அரசியலில் ஜனநாயகம் பிழைத்த காரணத்தால் தமிழர் அமைப்புகள் இணைந்து ஒரே குரலில் ''பிரிந்து வாழ்வோம்'' என்று பிரகடனம் செய்தன.

உலகில் அரசியல் மாற்றங்களைக் கண்டும் காணுதவர் போல் அடக்குமுறையையே ஆயுதமாகக் கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர் தங்கள் பேரினவாதப் போக்கை மாற்றிக்கொள்ளாதநிலையில் தமிழ் மக்களின் ஆயுதப் புரட்சியை அடக்கிவிட முடியும் என்ற கணிப்புடன் பல்வேறு தந்திரோபாயங்களை கையாள்கின்றனர்.

நூறுண்டுகள் எடுப்பினும் நியாயமான போராட்டம் வெற்றிபெற்றே தீரும் என்பதற்கு அண்மையில் விடுதலை அடைந்த பல இனங்கள் சான்று.

இன்று உலகெங்கும் மேதினத்தில் ஒலிக்கும் உரிமைக்குரல்களுடன் சேர்ந்து தமிழீழம் என்ற புரட்சிக குரலும் ஒலிக்கிறது.

எஸ். பி. கே.

## மே ஒன்று திருநாள்

உரிமைக் குரல் கொடுக்கும் ஒருநாள்
உன்னத மே யொன்று திருநாள்
பெருமை தரும் நல்ல பெருநாள்
பேதம் தனை மறக்கும் பொதுநாள்
கருமை யகன்று நல்ல வெள்ளை
காட்டும் புனிதம் தரும் கொள்கை
அருமைத் தொழிலாளி கூடி
ஆனந்தம் கொள்வார்கள் பாடி

—வ. யோகானந்தசிவம்

## ஆளும் நிலைக்கு உயர்ந்திடுவோம்

நாட்டின் பொருள்வளம் நலன் பெருக்கும்
மக்களில் உயர்ந்தவர் உழைப்பவராம்
பாட்டின் இசையில் அவர்புகழை
பாடிக் களிப்போம் பலம்பெறுவோம்

ஆக்கவும் அழிக்கவும் வல்லவராம்
அனைவர்க்கும் உண்டி அளிப்பவராம்
நீக்கியே வறுமையை ஒழிப்பவராம்
நிகரில் பெரியோர் உழைப்பவராம்

சிங்கள அரசின் தடைஉடைப்போம்
சிவந்தநம் மண்ணில் பயிர்வளர்ப்போம்
பொங்கி எழுவோம் போர்தொடுப்போம்
புதுமைகள் ஆய்வோம் சதிதகர்ப்போம்

தொழிலின் மகத்துவம் தனைஉணர்வோம்
உழைப்பவர் தொகையினைப் பெருக்கிடுவோம்
அழிக்கும் படைகள் அகற்றிடுவோம்
ஆளும் நிலைக்கு உயர்ந்திடுவோம்

—'மாரீசன்'

## உறவாடும் 'மே' தினமே!

கற்றோரும் மற்றோரும்,
கவின் கலைகள் பயின்றோரும்;
கருத்தில் இணைந்து நின்று
கண்ட தினம் மே தினமே!

உழுதுண்டு வாழ்வோரும்,
உழைத்து உண்போரும்;
உரிமைகளைக் கொண்டிங்கு
உறவாடும் 'மே'தின மே!

வண்ணை சே. சிவராஜா


சுதந்திர தமிழ் ஈழத்தை
கட்டியெழுப்ப அணிதிரளும்
மே தினம்
அணி திரண்டிடுவோம்.

**செல்லையா சிவபாதலிங்கம்**
வைரக்கல் நகை வியாபாரம்
191 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



தமிழ் மககளுக்கு
இயல்பு வாழ்க்கை தோன்ற
முற்ருன பொருளாதார தடைநீக்கம் வேண்டும்
தமிழினமே மே நாளில் அணிதிரள
கடலலையென திரண்டு வாரீர்!!!

**அண்ணு கோப்பி**
இணுவில் - திருநெல்வேலி - சுன்ருகம் - யாழ்ப்பாணம்



சிந்திய இரத்தம் காயவில்லை - எங்கள்
சீற்றமும் இங்கே குறையவில்லை
வேண்டிய சுதந்திரம் வாங்குமட்டும் - உழைக்கும்
வர்க்கத்திற்கு என்றும் ஓய்வு இல்லை.

படைகளை விலக்கிப் பாதையைத் திற
தடையின்றி எங்கள் பயணத்தைச் செய்ய
தமிழீழ அனைத்துத் தொழிலாள வர்க்கமும் மேநாள்
பேரணியில் அணி திரள வாரீர்! வாரீர்!!!

**யாழ். மாவட்ட 'விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
111, பிரதான வீதி - யாழ்ப்பாணம்

## மணிவாக்கு

மனதிலே கறுப்புப் புள்ளியை வைத்துக் கொண்டு அந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தால் மேலும் பல குழப்பங்களுக்கு அதுகாரணமாகிவிடலாம்.

— கண்ணதாசன்.

# படை முகாம்களின் ஆயுத, உணவு விநியோகம் பெரிதும் 'பாதிக்கப்படும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஏவுகணைகளால் விமானங்களை சுட்டு வீழ்த்தி இருப்பதால் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ளசில ராணுவமுகாம்களுக்கு ஆயுதம், உணவு விநியோகிப்பதில் அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது என்று ஏ. எவ் பி. செய்தியாளர் அமல் ஜயசிங்க பி. பி சி; சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி முகாம்களுக்கு உணவு ஆகாய மார்க்கம் மூலமே எடுத்துச்செல்லப்படுகின்றது. இதனல் இவைகள் வழங்குவதில்அரசாங்கத்துக்கு பல சிரமங்கள் இருக்கின்றன.

இதேவேளை ஏவுகணை 5000 அடி தூரத்துக்குத்தான் விமானத்தை தாக்கலாம். இதில் இருந்து தப்புவதற்கு பலாலி விமான நிலையத்தை மேலும் இரண்டு மைல் தூரத்துக்கு விஸ்தரிக்க வேண்டும.

அரசாங்கம் இந்த ஏவுகணைத் தாக்குதலால் பெரும் நெருககடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. விடுதலைப்புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குவருவதாக இருந்தால் இதனல் அவர்கள் கேட்பதை அரசாங்கம் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கும். அல்லது அரசாங்கம் விடுதலைப்புலிகளின் பலத்தைக் குறைத்து சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டுமானல் இராணுவ நடவடிக்கையில் இறங்கவேண்டும் என்ருர்.

-ம-சி

## எள்ளுப்பயிர் பாதிப்பு

(மானிப்பாய்)

வலி மேற்குப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினல் எள்ளுப்பயிர்கள் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (71)

## 100 பெட்டி மலத்தியன் வந்தது

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து கடந்த வாரம் வந்து சேர்ந்த 'மஹோ' கப்பலில் 100பெட்டி மலத்தியன் வந்து சேர்ந்துள்ளது வைத்தியசாலைக்கு விநியோகிப்பதற்காக மண்ணெண்ணெயும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## நமது நோக்கு

## மேதின நினைவுகள்

உலகெங்கும் வாழும் உழைப்பாளர்கள் ஒன்று கூடி மகிழ்ச்சிகொள்ளும் நாள் மேதினம்,

அமெரிக்க நாட்டில் ஆரம்பித்த மேதினக் கொண்டாட்டம் பலவேறு நாடுகளிலும் பலவேறு கோலங்களிற் கொண்டாடப்படும் நிலை தோன்றியுள்ளது.

முதலாளித்துவத்துக்கு எதிராகத் தொழிலாளர்களைத் திரட்டி சோசலிச அரசை அமைக்க மேதினக் கோஷங்கள் சில நாடுகளில் எழுப்பப்பட்டன.

உழைக்கும் வர்க்கத்தின் கோரிக்கைகள் எவை, அவற்றை வலியுறுத்திப் பெறும் வழிகள் எவை என்பதெல்லாம் மேதின விழாக்களில் அலசப்பட்டன.

அரசுகளே மேதின விழாக்களை நடாத்தி, வேடிக்கை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி, தொழிலாளர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த முற்பட்ட நிகழ்ச்சிகளையும் நாடு கண்டது.

ஒருகாலத்தில்— சகல இன, மொழித் தொழிலாளர்களும்ஒருகுடையின் கீழ் அணி திரண்டு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்திவிட்டால், மொழி, இனப் பிரச்னைகள் தாமாகவே மறைந்து விடும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

ஆனல்- இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் அனுபவம் கசப்பானது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

தொழிலாளர் என்ற வர்க்கரீதியாக மாத்திரமல்லாது இனரீதியாகவும் மக்கள் அடக்கப்படும் போது முதலில் இன விடுதலையை முன்னெடுத்துச் செல்லவேண்டியது அவசியம் என்பது இன்று உணரப்பட்டுவிட்டது.

இராணுவ நடவடிக்கைகளின்போது, இடம்பெயர்வதாலும்,தொழிற்சாலைகள் மூடப்பட்டுவதாலும் பெருமளவில் பாதிக்கப்படுவது உழைக்கும் வர்க்கமே.

பொருளாதாரத் தடைகள் போடப்பட்ட போதெல்லாம், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

வாழும் உரிமையை நிலைநிறுத்தினல் பின்னர் தொழிலாளர்கள் உரிமை தானகவே அரும்பும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்பது வரவேற்கத்தக்கதே.

மேதின எழுச்சி, மக்களின் உரிமைக் கிளர்ச்சி உணர்வுகளுக்கு மேலும் வலுவூட்டும் என நம்புகிருேம்.

## இராசி பலன்

01—05—1995

திங்கட்கிழமை

(தமிழுகசு சித்திரை—18)

துதியை: பின்னிரவு 2-52 வரை கார்த்திகை: நள்ளிரவு 12-19 வரை. இராகுகாலம்: காலை 7-27 முதல 8-57வரை. சுபவேளை: காலை 11-57முதல் 1-27 வரை. கார்த்திகை விரதம் மரணயோகம்.

மேடம்: இனசன விரோதம், வீண் கவலை. தொழில் நஷ்டம்.

இடபம்: பெரியார் உதவி, குடும்ப சுகம். சுப செய்தி.

மிதுனம்: நண்பர் பகை. வீண் கலவரம். பணக் கஷ்டம்

கடகம்: சமரசத் தீர்வு. வேலைப் பளு. பிறர்க்குதவுதல்

சிங்கம்; வாக்கு வசீகரம். அதிகாரிகள் பெருமை. வெகுமதி

கன்னி: கண் கலங்குதல் பெற்ருேர் சினம். அலைச்சல்.

துலாம்: எதிரிகள் தொல்லை வீண்பழி கேட்டல். காரியத் தடை.

விருச்சிகம்: மகிழ்ச்சியான சமபவம். சகோதரி உதவி. சுப காரியம்.

தனுசு: விநோதத் திட்டம். குடும்ப மகிழ்ச்சி. தொழில் உறவு.

மகரம்: கடமை தவறுதல் மனச் சஞ்சலம். துரோகச் செயல்.

கும்பம்: அபகீர்த்தி, குடும்பப் பிரிவு. நெஞ்சு வலி.

மீனம்: தொழில் உத்வேகம். சாதனை செய்தல். செல்வந்தர் உறவு.

— ஜோஸ்யர்

ஐ. சி. ஆர். சியிடம்

# உயிரிழந்த படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளால் நேற்றுக் காலை சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்து உயிரிழந்த படையினரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று இச்சடலங்கள் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலம் எடுத்து செல்லப்பட்டதென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலைஅராலித் துறைப்பகுதியில் விடுதலைப் புலிகளினல் காவலரண்கள் தகர்க்கப்பட்டபோது கொல்லப்பட்ட படையினரில் புலிகளால் கைப்பற்றப்பட்ட நான்கு படையினரின் சடலங்களையும் விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்துள்ளனர். ம:சி

## சின்னம் சூட்டும் வைபவம்

(கொழும்புத்துறை)

யாழ். அராலி சரஸ்வதி மகாவித்தியாலய சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு செஞ்சிலுவைச் சங்க போஷகர் திரு. க. குகராசா பிரதம விருந்தினராகக் கலந்து வைபவத்தைச் சிறப்பித்தார். 154

# வீதிச்சோதனையின் போது தமிழர்மீது தாக்குதல்

(மட்டுநகர்)

மட்டு. ஆரையம்பதி பகுதியில் வீதிச்சோதனைகளில் ஈடுபடும் படையினர் தமிழர்களைக் கடுமையாகத் தாக்கி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் இத்தாக்குதல்களினல் வீதிகளில் நடமாட முடியாத நிலையில் இங்குள்ள தமிழர்கள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இந்த நடவடிக்கைகளினல் தமிழர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ளனர்.

ஆரையம்பதியில் முக்கியமான வீதிகளில் தடைகள் போடப்பட்டு வீதிச்சோதனைகள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று மட்டுமாவட்டத்தின் பல பகுதிகளிலும் வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதிச் சோதனைகளில் விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -ரி

## பலதும் பத்தும்

### கல்லான மரம்

பழங்காலத்தில் செழித்து மரமாகி நின்ற பின்னர் கல்லாகிப்போன மரம் (Petrified wood) ஒன்று எகிப்தில் உள்ள அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. எகிப்தின் மேற்குப்புறப் பாலைவனத்தில் இது கண்டெடுக்கப்பட்டதாம்.

கல் சூடாகி... அதில் மழை விழுந்து ..... குளிராகி அது வெடித்து உடைந்து காலப் போக்கில் மண்ணுகி...... அதில் விழுந்த விதை முளைத்து மரமாகி......பின் பாலைவன மண் மூடி...... அந்த மரமே கல்லான மரமாகிவிட்டது என்கிருர்கள் ஆய்வாளர்கள்.

கல்லால மரத்தின் கீழிருந்து இறைவன் உபதேசித்தான் என்கிருர்கள். கல்லால மரம்......அது எது?

— மயூரன்

# விவசாய ஸ்தாபனங்களை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

விவசாய ஸ்தாபனங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கமத்தொழில் சேவைத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. 22 மாவட்டங்களில் உள்ள சுமார் 11,300 விவசாய ஸ்தாபனங்கள் புனரமைக்கப்படவிருக்கின்றன.

சுமார் 50 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த நடவடிக்கைகளின்போது விவசாயிகளின் நலன் கருதி பயிற்சித் திட்டங்களும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. -ரி

★ எங்கள் கண்ணீரிலும் செந்நீரிலும் தமிழீழத்தை கட்டியெழுப்புவோம்

அரசின் அடக்குமுறைக்கு எதிராக
மேதினம் எழுச்சி கொள்ளட்டும்!

ஞானம் ஆடையகம்

34, பெரிய கடை
[சோதியா தெரு]
யாழ்ப்பாணம்

★ தமிழன்னையின் விலங்கொடித்து தமிழீழத்தை நிர்மாணித்து
எம் சுதந்திரத்தை நிலைநாட்டுவோம்

★ மே தினத்தில் சபதமெடுப்போம் ★

திருமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி (மேல்மாடி) யாழ்ப்பாணம்

# மே தினம்: தொழிலாளர்களின் விழிப்புணர்வை புலப்படுத்தும் தினமாகும்

(யாழப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமாகிய மே நாள், தொழிலாளர்களின் விழிப்புணர்வைப் புலப்படுத்தும் தினமாகும். முதலாளித்துவ வர்க்கத்தால் அடக்கப்படும் தொழிலாளர்கள், தமது உரிமையைத் தமது புரட்சி மூலம் பெற்றுக் கொண்ட தினமாகிய இந்நாள், எமது மண்ணிலும் தொழிலாளர் தமது நிலையையும், கடமையையும் உணர வைப்பதாக அமையவேண்டும்

இவ்வாறு மே தினத்தையொட்டி யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது, அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்கள் மீது முழுதான ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்பு வேறுவிதமாக அமைந்துவிட்டது. எமது உரிமைகளைத் தர மறுத்து நிற்கும் அரசு, பொருளாதாரத் தடை நீக்கியதும் அது எமக்கு வழங்கிய சலுகை எனக் கூறியது. ஆனால் மீளவும் பொருளாதாரத் தடை அமுலுக்கு வந்துள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பொருளாதார விழிப்புணர்ச்சி அவசியமானது. அதற்கு ஊன்றுகோலாக, உரமாக அமைபவர்கள் தொழிலாளர்கள். இத்தினத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் தனது பொறுப்புணர்வைப் புரிந்து கொள்ளவேண்டும். நாம் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்கள் நாமே. எனவே ஸ்ரீலங்கா அரசின் கொடிய பொருளாதாரத் தடையை எதிர்த்துப் பொருளாதார யுத்தம் புரியவேண்டிய பொறுப்பு எமது தமிழீழ மண்ணில் உள்ள ஒவ்வொரு தொழிலாளியினதும் கடமையாகும்.

யுத்தகாலப் பகுதியின் பொருளாதாரத் தடையையும் எதிர்கொண்டு கல்வியைத் தொடருவதில், எமது மாணவ சமுதாயம் பல துன்பங்களை அனுபவித்து வருவது உலகறிந்த உண்மை. ஒரு நாட்டின் எதிர்காலச் சமுதாயத்தைச் சகல துறைகளிலும் சிருஷ்டிப்பவர்கள் மாணவர்களும், தொழிலாளர்களுமே. எமது நாட்டைப் பொருளாதார ரீதியாகவும், அறிவிறல் ரீதியாகவும் வளர்ந்த நல்லொழுக்கம் உள்ள அமைப்பாகவும கட்டி எழுப்ப வேண்டியவர்கள் மாணவர்களே. எனவே உலகத் தொழிலாளர் தினமாகிய மே 01ஐ மாணவர்களாகிய நாம் நாட்டிற்கு ஆற்றவேண்டிய பணியைப் புரிந்துகொண்டு அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்க உறுதி பூணுவோம்.

தமிழ் மக்களது உரிமைகளைச் சலுகைகள் எனக் கருதும் ஸ்ரீலங்கா அரசு, தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முழு அளவிலான பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்திக் கொண்டு, பாதுகாப்பான பாதையைத் திறவாது சமாதானம் என்று மக்களை ஏமாற்றி எமது போராட்டத்தை நசுக்க முயன்றது. இந்நிலையில் அற்ப சில விடயங்களைச் செய்துவிட்டு. ஓர் அரசு எவ்வளவு சலுகைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு சலுகைகளைச் செய்துள்ளதாகக் கூறியுள்ளது. இவற்றில் இருந்து ஓர் உண்மையைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டுள்ளனர், தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு வழங்கத் தயாராக இல்லை. தமிழ் மக்களையும், தமிழ்மக்களது போராட்டத்தையும் சமாதானம் எனக் கூறிக்கொண்டு இன்னுமொரு தடவை ஏமாற்ற முடியாது என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

எமது உரிமையை வென்றெடுக்கவேண்டியர்கள் நாமே என்ற உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும். தன்னிறைவுப் பொருளாதாரமே ஒரு நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுத்தரும் எனவே இத் தொழிலாளர் தினத்தில மாணவர்களாகிய நாமும் இணைந்து தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டி எழுபபுவதன் மூலம் எமது சுதந்திர உரிமையை உறுதி செய்துகொள்வோம். சி

தமிழினமே மே நாளில் அணிதிரள
கடலலையென திரண்டு வாரீர்
பாடசாலை உபகரணங்களுக்கு:-
சோபிதா 363. காங்கேசன்துறை விதி,
யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து மன்றம் நடாத்தும் காலாண்டு சமயக் கருத்தரங்கு முதலாவது அறிவியல் அரங்கு அண்மையில் சரசாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பரவிநாயகர்ஆலயத்தில் மன்ற உப தலைவர் திரு. கை. சண்முகதாசன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இன்றைய நிலையில் இந்து சமயம் வளர சமய நிறுவனங்கள் ஒத்துழைப்பு அவசியம் தேவை என்றபொருள்பட அதிபர் சி. சிவசுப்பிரமணியம், செல்வி ச. சரவணி. திரு. எஸ். பவானந்தன் ஆகியோர் உட்படக் கருத்துரைகள் வழங்கினர். மன்றச் செயலாளர் திரு. க. சிவசங்கரநாதன் நன்றி கூறினார். -154

# தனியார்துறை பென்ஷன் நகல்திட்டம் தயாரிப்பு

(கொழும்பு)

தனியார்துறையினருக்கும் பென்சன் வழங்குவதற்கான நகல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து இதற்கான பூரண வேலைத்திட்டமொன்றை மேற் கொண்டுவருவதாக அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனியார் ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிப்பது தொடர்பாக ஏற்கனவே ஏழுபேர் கொண்ட குழுவொன்று அமைச்சர் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. (கே-ரி)

# புதிய விமானங்களை அரசு வாங்கும்

(கொழும்பு)

புலிகளினால் இரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து இராணுவத்தினர் புதிய நவீன போர் விமானங்களை வாங்கக் கூடுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு விமானப் படையினரிடமுள்ள போர் விமானங்கள் மற்றும் விமானங்கள் இலக்காகும் நிலைமை எழுந்துள்ளதால் நவீன ரக போர் விமானங்கள் மூலமே இத் தாக்குதலிலிருந்து தப்பமுடியுமென படையினர் இனிக்கருதுவர்.

இதையடுத்து விமானப் படையினர் வெளிநாடுகளிலிருந்து பலகோடி ரூபா பெறுமதியான போர் விமானக் கொள்வனவில் உடனடியாகவே ஈடுபடக் கூடுமெனவும் கருதப்படுகிறது.

இதேவேளை விமானப்படைபடையினருக்கு தேவையான நவீனரக போர் விமானங்களையும், ஹெலிகொப்டர்களையும் கொள்வனவு செய்வதற்காக விமானப்படை அதிகாரிகள் குழு ரஷ்யா சென்றதும் தெரிந்ததே. சி

# சிங்கப்பூர் - இந்தியபொலிஸ் இடையில் கருத்துவேறுபாடு

(புதுடில்லி)

பம்பாயில் மூன்று வருடங்களுக்கு முன் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்று தேடப்பட்டுவரும் 35 வயதுடைய பப்லு ஸ்ரீ வாஸ்தவ என்பவரை, சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் விவகாரத்தில் சிங்கப்பூர் பொலிஸாருக்கும் — இந்தியப் பொலிஸாருக்குமிடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பு, ஆள் கடத்தல் சம்பவங்களில் இந்தியாவில் தேடப்பட்ட பப்லு ஸ்ரீ வாஸ்தவ இந்தியப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## சனசமூகநிலைய திறப்புவிழா

(மானிப்பாய்)

மானிப்பாய் செல்வர்வளவு சித்திவிநாயகர் சனசமூகநிலைய திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

திரு. கு. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் உள்ளூராட்சி ஆணையாளருமான திரு. து வைத்திலிங்கம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் தெற்கு கிராம அலுவலர் இ. இராஜயோகன, சண்டிலிப்பாய் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வசந்தி ஜெயராஜ், மானுப்பாய் மெமோறியல் கல்லூரிஅதிபர் அ. மு. அருணசலம் ஆகியோர் கலந்து கொண்டனர். -71

# கொழும்பு நீர் விநியோகத்தில் நஞ்சூட்டப்பட்டதாக தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகர நீர் விநியோகத்தில் நஞ்சூட்டப்பட்டுள்ளதாக வதந்தி பரவியதையடுத்து மக்கள் பெரும் குழப்பத்துக்குள்ளானார்கள்.

லபுகம நீர்த்தேக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட சதிவேலை காரணமாக கொழும்பு நகர நீர் விநியோகத்தில் நஞ்சூட்டப்பட்டுள்ளது என்ற வகையில் கொழும்பில் வதந்தி பரவியது.

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச்சபை இதுபற்றி விடுத்த அறிவித்தலில் சகல நீர்த்தேக்கங்களிலும் உள்ள நீர் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டது என்றும் எந்தவித நச்சுத்தன்மையும் அங்கு காணப்படவில்லை என்றும் அறிவித்துள்ளது. (ரி)

புரட்சி வெடிக்கட்டும் எம்மண்ணை மீட்க
மே தினத்தில் அணி திரள்வோம்
சிவன் ஸ்ரோர்ஸ்
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

1995 மே நாள் பேரணி
சொந்த மண்ணில் சுதந்திரமாக
என்றுமே வாழ்ந்திட வழிவகை செய்வாய்
அனைத்து தமிழீழ மக்களையும் பேரணியில்
அணி திரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
அன்னராஜா
பல்பொருள் களஞ்சியம்
158 [356] ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம்

அஞ்சி அஞ்சி சாவதற்கா நாம் பிறந்தோம் அடிமைத்
தளையொடித்து விடுதலையை நாம் பெறுவோம்
தமிழினமே தேசியத் தலைவரின் தலைமையில்
இம் மே நாளில் அணிதிரள வாரீர்!!
பாலாஜி புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

நேசக் கரத்தை நீட்டிய தலைவன் பாதையில் நாமென அறிவாய்!
அடக்கிட முனையலாம் அடங்கிட நினையோம்!!
மே நாள் பேரணியில் கடலலையென திரண்டு வாரீர்!!!
அனைத்து ஆங்கில மருந்து வகைகளையும் ஒரே ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ள நியாய விலைக் கடை
ஜீவா மருந்தகம்
சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, (வளாகம் முன்பாக)

# மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அமெரிக்கா, ரஷ்யா, நேபாளம் கோரிக்கை

(கொழும்பு)

மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்கா, ரஷ்யா, நேபாளம் போன்ற நாடுகள் இலங்கை அரசைக் கோரியுள்ளன.

இலங்கை மக்கள் சமாதான சூழ்நிலையில் சுபீட்சத்துடன் வாழ்வதற்கு அவர்களின் நியாயபூர்வமான நலன்களுக்கு வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதை அமெரிக்கா உறுதியாக ஆதரிப்பதாக வலியுறுத்தியுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுக்கான முயற்சிகளில் சகல கட்சிகளும் ஒத்துழைப்புடன் ஈடுபட வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் முறிந்து போய்விட்டதால் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதால் பாரதூரமான விளைவுகள் ஏத்படலாம் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

சமீபத்தில் பல சம்பவங்கள் இடம்பெற்றாலும் அரசு சமாதானமுயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்றும் ரஷ்யா கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் புத்தி சாதுரியமாக நடந்து மீண்டும் பேச்சுவார்ந்தையில் ஈடுபடும் என்று ரஷ்யா நம்புகிறது.

நேபாள வெளிநாட்டு அமைச்சு பேச்சாளர் இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்கள், மோதல்கள் அதிகரிப்பதற்கும் சமாதான முயற்சிகள் சீர்குலைவதற்கும் வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். -ரி

## நூற்றுக்கணக்கான மக்கள் இடம் பெயர்வு

(வட்டுக்கோட்டை)

மாதகல், பலாலி முகாம்களிலிருநது ஏவப்பட்ட ஷெல்கள் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் பனிப்புலம், சுழிபுரம் பகுதிகளில் விழுந்து வெடித்ததை அடுத்து அப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் பெரும்பீதியுடன் கிடைத்த பொருட்களைக் கையில் எடுத்துக்கொண்டு சாரி சாரியாக இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டைப் பிரதேசத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தைக் காணக் கூடியதாக இருந்தது.

சிலர் சித்தன்கேணி, வட்டுக்கோட்டைகளிலுள்ள மரங்களுக்குக் கீழ் தங்கியிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலிலுள்ள பாரிய மரங்களின் கீழ் கூட்டம் கூட்டமாகவும் குடும்பம் குடும்பமாகவும் பெருந் தொகையாக தங்கிருந்ததைக் காணமுடிந்தது. 139-சி-ரி

தமிழீழ தாயகம் தூங்கிடாது
அது தறிகெட்டு ஒருபோதும் தேங்கிடாது
1995 மே நாள் இதற்கு வழிவகுக்கட்டும்
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
ஸ்ரீ சுப்பிரமணியம் அச்சகம்
235' கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## சாரணர்க்கு அழைப்பு

(கொழும்புத்துறை)

காங்கேசன்துறை மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள், சாரண ஆசிரியர்களை மேதின ஒழுங்கிற்கு உதவுவதற்கு, இன்று திங்கட்கிழமை நண்பகல் 1-00 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவிலடியில் சாரணர் சீருடையில் ஒன்றுகூடுமாறு மாவட்ட ஆணையாளர் நா. போஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார். 154

## சனசமூக நிலைய சம்மேளனம் வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், மேதினப் பேரணியில் சகல சனசமூக நிலையங்களும் தமது பகுதி நிலையங்களின் உறுப்பினர்களை ஒருங்கு சேர்த்துப் பாரியஅளவில்கலந்துகொள்ளுமாறும், ஊர்வலத்தில் பாதாகைகள், சுலோக அட்டைகள் கோஷங்களுடன் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. 154

## சிங்கப்பூர்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கப்பூர் பொலிஸார்தயார். ஆனல் சிங்கப்பூரில் பல நிதி மோசடிகளில் ஈடுபட்டு, இந்தியாவுக்கு தப்பிச் சென்ற இந்திய வர்த்தகரான ராஜன் பிள்ளை என்பவரை இந்தியப் பொலிஸார் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சிங்கப்பூர் பொலிஸார் நிபந்தனை விதித்துள்ளார்கள். -வி-ரி

போர் மேகம் தெரியுதடா... எங்கள் வலிமையை
உலகமெங்கும் பறைசாற்றுவோம் ... தங்கத் தமிழ் ஈழம் மலருமடா !!!
மேதினம் ஒற்றுமையின் எழுச்சித் தினம் !!
நதியா நகை மாடம்
02, சந்தோசம் வீதி,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

சொல்லையும் செயலையும் ஒன்றுக்கு - துணிந்துமே தீர்வினை முடிவாக்கு
தமிழினமே மே நாளில் அணிதிரள கடலலையென திரண்டு வாரீர்!
ஆங்கில மருந்து விற்பனையாளர்:
குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

எங்கள் நிலத்தில் மீளக குடியேற
தங்கு தடையின்றி தடைகளை அகற்று
மே நாள் எழுச்சிப் பேரணியில்
ஒரு கொடியின் கீழ் அணிதிரள்வோம்!
வேலணை பல நோ.கூ. சங்கம்
யாழ்ப்பாணம்

# மே நாளில் தமிழீழத்தின் சிறப்பை உலகு அறியச் செய்வோம்

## கூட்டுறவுச் சபை அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

மேதின நாளில் தமிழினத்தின் உணர்வு பூர்வமான சிந்தனையை ஆர்ப்பாட்டபேரணியில் அணிதிரண்டு எழுச்சிமிக்க கோஷங்களை எழுப்பி தமிழீழத்தின் தனிச்சிறப்பை அனைத்துலகமும் அறியச்செய்வோம். இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை விடுத்துள்ள மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட தடைகளினுல் எம்மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவரும் இவ்வேளையில் அவர்களுக்கு உதவியளிக்க எம்மக்கள் மத்தியில் அரும்பணியாற்றிவரும் அமைப்புக்கள் பல. இந்த வரிசையில் கூட்டுறவு இயக்கமும் தன்னுலான பங்களிப்பை தமிழீழ பிரதேசத்தில் ஆற்றிவருவதை யாவரும் அறிவர். கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும் பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் பிரதிபலன் பாராது இயலுமான பங்களிப்பை வழங்கி வருகின்றன.

தமிழ்மக்கள் உரிமைகள் கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை என்பதையும், தன்னிகரில்லாத்தலைவன் தமிழ்மக்களுக்கு வழிகாட்டி நிற்கிருன் என்பதையெல்லாம் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்ட மேதினத்தில் கூட்டுறவாளர்கள் அனைவரும் அணிதிரள்க.

(ரி)

### சுகாதார

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு அனிப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடும்ப நலச் சேவையாளர்களின் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை பற்றிய சுற்றுநிருபங்களும் சிங்களத்தில் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. 72

### அமைச்சரவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபருடனும் ஆலோசனைகளை நடாத்தியுள்ளார்.

இதன்போது அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்தும், முப்படைகளினது அவசரத் தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டமையானது தெற்கில் பெரும் அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### கண்டெடுக்கப்பட்டது

தியாகராசா புஷ்பராணி, காரைகள என்பவரது தேசிய அட்டையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாம்என்றும்கூட்டங்களைமாத்திரம் நடாத்தும்படியும் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

### பதிஞெரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

12 கடற்படையினரும் கட்டுமுறிவு படைமுகாம் அழிப்பில் 36 இராணுவத்தினரும், திருமலையில் 6 பொலிஸாரும் அராலித்துறையில் 23 இராணுவத்தினரும் 'அவ்ரோ' விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டதில் 100 படையினரும் கொல்லப்பட்டனர்.

கடந்த பல வருடத் தாக்குதலில் பதிஞெரு நாட்களில புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் சர்வதேசரீதியில் முக்கியத்துவமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### கொழும்பில் பாது

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரயில்களும் துருவித் துருவி சோதனையிடப்படுகிறது.

இன்று நடைபெறும் மேதினக் கூட்டங்கள், பேரணிகளில் புலிகள் தாக்குதல் நடத்தலாமென்று புலனுய்வுத்துறையினர் எச்சரித்ததை யடுத்தே இவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளும் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பின் எந்தப் பகுதியைப் பார்த்தாலும் ஆயுதம் தாங்கிய படையினரே காணப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது. இதேவேளை மேதினப் பேரணிகளில் கலந்துகொள்ளவேண்டாமென புலனுய்வுத்துறையினர் அரசியல் கட்சித் தலைவர்கள் பலருக்கும் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 19ம் திகதிக்குப் பின் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் உக்கிரத் தாக்குதல்களால் நிலைகுலைந்துள்ள படையினரும், அரசும் தற்போது சர்வதேச உதவியை அவசரமாக நாடியுள்ளதையே இது காட்டுவதாக அமைந்துள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை இனப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வை விடுத்து, அரசு சர்வதேசத்திடமிருந்து இராணுவத் தளபாடங்களைப் பெற்று போரை பெரிய அளவில் தொடரவே முயற்சிப்பதாகவும் அவதானிகள் கூறுகின்றனர். க சி

### தொண்டமானுறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

இக்குண்டுகள் செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலுள்ள தங்கவேல் தங்கவடிவேல் என்பவரின் வீட்டின் மேல் விழுந்து வெடித்ததால் அவ்வீடும் அங்குள்ள தென்னை மரங்களும் பெரும் சேதமடைந்ததுடன் அங்கிருந்த தங்கவேல் தங்கவடிவேல் (வயது 32] அவரது மனையான த. றஞ்சினி [வயது 23) அவர்களின் மகள் த. அகல்யா (வயது - 03) மற்றும் துரைரட்னம் அரியமலர் (வயது 491 ஆகியோருடன் அயல வீட்டுக்காரரான சிவானந்தப்ஐயர் யோகம்மா [வயது 30] ஆகியோரும் படுகாயமடைந்தனர்.

மற்றுமொருகுண்டு தொண்டைமானுற்றுச் சந்தி வீரகத்திப்பிள்ளையார் ஆலய வீதியில் போடப்பட்டதால் வீதியால் சென்று கொண்டிருந்த தொண்டைமானுற்று வாசியான நட்சத்திரம் ஐங்கரன் ]வயது - 50) எனபவரும் படுகாயமடைந்தார்.

இத்தாக்குதலில் காயமடைந்த அனைவரும் உடனடியாக மந்திகை வைத்திசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் தங்கவடிவேல் றஞ்சினி [வயது - 28: என்பவரின் நிலமை கவலைக்கிடமாயுள்ளதாக தெரிவிக்கட்படுகிறது.

மற்றுமொருகுண்டு வீச்சினுல் தொண்டைமானுறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தெற்குப் பக்கமாக உள்ள சி. சின்னன் என்பவரது வீட்டில் இரு மாடுகள் வயிறு பிளந்த நிலையில் இறந்துள்ளன,

(51 - 160 - 157-சி)


# மே நாள் 1995

சுதந்திரம் எமது பிறப்புரிமை
சுட்டெரிப்போம் அதைத்
தடுப்பவரை

- மின்சார சபை ஊழியர்

(சி-1469)

பட்டினி போட்டுக் கொல்லாதே! பல தடைகள் போட்டு நில்லாதே!!

1995 மே நாள் மாபெரும் எழுச்சிப் பேரணியில் ஒரு கொடியின் கீழ்
ஒன்று சேருவோம் திரண்டு வாரீர்!!!

# ஜெயா அழகு மாடம்

மொத்த வியாபாரம் :-
187, இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம் :-
177 ஏ, இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

எங்களின் கண்ணீரிலும் செந்நீரிலும் தமிழீழத்தைக் கட்டியெழுப்புவோம்!
ஆயிரம் ஆயிரமாக சந்து பொந்து எங்கணும் மேதினத்தில் எழுச்சி கொள்வோம்!!

அரசின் கொடுங்கோன்மைக்கு எதிராக
மே தினம் எழுச்சி பொங்கட்டும்!!!

# லிங்கம் குளிர்களி நிலையம்

(லிங்கம் கூல்பார்)

வெலிங்டன் சந்தி — யாழ்ப்பாணம்.

## வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை தொடரமுடியாத நிலை உருவாகும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை தொடரமுடியாதநிலை முப்படையினருக்கும் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இரு அவ்ரோ விமானங்களை விடுதலைப் புலிகள் ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தியதைத்தொடர்ந்து வடக்கு-கிழக்கு வான் பிராந்தியத்தில் யுத்த விமானங்கள் புகமுடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பொம்மர், அவ்ரோ, புக்காரா ஹெலிகள் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கிலக்காகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் படையினர் கூறியுள்ளனர்.

இதனால் வடக்கு - கிழக்கு வான் பரப்பில் விமானப்படை தனது கட்டுப்பாட்டை இழக்கும்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் படையினரின் இராணுவ நடவடிக்கைக்கு விமானப்படை உதவமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தற்போது வடக்கு-கிழக்கில் பாரிய அளவில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாம். சி

## வடமராட்சிக் கடலில் பிடிபட்ட மூவரும் பலாலி முகாமில்

(நெல்லியடி)

வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடற்பரப்பில் அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலின்போது காணமல்போன மீனவர்கள் மூவரும படையினரால் கைதுசெய்யப்பட்டு பலாலி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இம்மூவரையும் விடுவிக்கக் கோரி இவர்களது உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் பலாலி முகாமுடன் தொடர்பு கொண்டுள்ளனர். 160-சி

## படை நடவடிக்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது

### அரசாங்கம் கூறுகின்றது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கும், இராணுவ சாதனங்களுக்கும் சேதமேற்படுத்தியபோதிலும் இது இராணுவ நடவடிக்கையை எந்த விதத்திலும் பாதிக்காது என அரசாங்கம் நேற்று தெரிவித்தது.

இது தொடர்பாக அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில்; இராணுவத்தினர்மீது அரசாங்கம் பூரண நம்பிக்கை கொண்டுள்ளது. விடுதலைப்புலிகள் விடுக்கும் எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கும் வகையில் அரசு ஆகக்கூடிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும். இதற்காக பாதுகாப்பு படையினர் பூரண தயார் நிலையில் உள்ளனர்.

வடக்கு-கிழக்கு மக்கள் உட்பட நாட்டின்சகல பொதுமக்களின் நலன்களுக்கும் பங்கம் ஏற்படாத விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் குழப்பமடையாது அமைதியாக இருப்பதுடன் வீண் வதந்திகளை நம்ப வேண்டாமென்றும் கேட்டுள்ளது. (க-சி)

## மே தின முன்னோடி ஊர்திப் பவனி

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை முன்னிட்டு முன்னோடிப் பிரச்சார ஊர்திப் பவனி ஒன்று நேற்று யாழ். மாவட்டம் எங்கும் நடைபெற்றது.

தனியார் போக்கு வரத்து சேவைச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பிரச்சார ஊர்திப் பவனியில் நூற்றுக்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள், மோட்டார் கார்கள் பங்குபற்றின. இவ்வாகனங்களில் சுலோகங்கள் எழுதப்பட்ட வெள்ளை அங்கிகள் அணிந்து கொண்டு தொண்டர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை ஆரம்பமான இவ் ஊர்திப் பவனி பிற்பகல் வரை நடைபெற்றது.

சுலோகங்கள் எழுதப்பட்ட வெள்ளை அங்கிகள் அணிந்த தொண்டர்கள் வாகனங்களில் நிறுத்தப்பட்டிருந்தனர். 162 - 155-சி

### 2 வது அவ்ரோ தாக்குதலில்

## இரு விங் கமாண்டர்களும் இராணுவ மேஜரும் உயிரிழப்பு

(கொழும்பு)

யாழ்குடா வான்பரப்பில் நேற்று முன் தினம் சுட்டுவீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்திலிருந்து விமானப் படையின் விங் கமாண்டர் எஸ்.எம் எச். குணதிலக, விங் கமாண்டர் ஜி எஸ் விக்கிரமசிங்க, ஸ்குவாட்ரன் லீடர் டபிள்யு. கே வெல்கம, பிளைட் லெப்ரினன் எஸ். பத்திரத்ன, பிளைட் லெப். எஸ். வி. எஸ். பெர்ணண்டோ, பிளையிங் ஒபிஸர் சி. ஜெயசேகர, பிளையிங் ஒபிஸர் என். அபயவிக்கிரமவும் இராணுவத்தைச் சேர்ந்த மேஜா விக்கிரம, லெப்டினன் டயஸ், 2ம் லெப்டினன் விஜயமான ஆகியோரும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகவின் மகனும் இந்த அவ்ரோ விமான விமானியுமான சுரந்தவும் உயிரிழந்தவர்களில் ஒருவராவர்.

எனினும் இரு விமானத் தாக்குதலிலும் கொல்லப்பட்ட முழுப் படையினரின் விபரங்கள் பாதுகாப்பு அமைச்சினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. சி

## கொழும்பு எங்கிலும் பெரும் பயப் பீதி!

(கொழும்பு)

கொழும்பு எங்கிலும் பெரும் பயப் பீதி நிலவுவதாக பி.பி.ஸி தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இரு விமானங்களை சுட்டு வீழ்த்திய புலிகள் மே தினமான இன்று கொழும்பைத் தாக்கலாம் என்று பெரும் அச்சம் நிலவுகிறதாம்.

குடிநீரில் நஞ்சு கலக்கப் படலாமென்ற வதந்தியை அடுத்து நகரத்தில் நீர்த்தேக்கங்களிற்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நகரத்தில் மேலதிக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குள் அனுமதிக்கப்படுவோர் தொகையும் கட்டுப் படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு எங்கிலும் இராணுவ மயப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (சி)

## இராணுவ தளங்களை அழிக்கும் முதல் கட்டமே விமானத் தகர்ப்பு

(கொழும்பு)

இராணுவ தளங்களை அழிக்கும முதற்கட்ட நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகள் விமானத் தகர்ப்பை மேற்கொண்டுள்ளதாக ஏ. எப். பி. செய்தியாளர் தெரிவித்தார்.

இராணுவ தளங்களுக்கு உதவும் விமானங்களையும், கப்பல்களையும் அழிக்கும் முயற்சியில் புலிகள் இறங்கியுள்ளமை வடக்கு - கிழக்கிலுள்ள மிகப்பெரிய படைத்தளங்களை அழித்தொழிக்க அவர்கள் மேற்கொள்ளும் முதற்கட்ட நடவடிக்கையாகவே கருதப்படுகிறது என இராணுவ அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

திருமலைத் துறைமுகத்தில் இரு பாரிய பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டதும், யாழ்ப்பாணத்தில் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதும் இலங்கைப் படையினரின் விநியோக நடவடிக்கைகளுக்கு எதிராக புலிகள் மேற்கொண்ட தாக்குதலாகவே கருதப்படுவதாகவும் படையினர் கருதுகின்றனர்.

புலிகளின் இவ்வாறான தாக்குதல்கள் மேலும் தொடரும் எனவும் படையினர் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## 800 அடையாள அட்டை மாணவருக்கு விநியோகம்

[யாழ்ப்பாணம்]

சென்ற முதலாம் தவணை காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து தேசிய அடையாள அட்டைகள் பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருந்த 800க்கும் மேற்பட்ட மாணவர்களின் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட ஆள் பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான முதலாம் தவணை காலப்பகுதியில் யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளிலிருந்து 885 மாணவர் அடையாளஅட்டை விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக எமது திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்விண்ணப்பங்களில் ஜனவரி மாதத்தில் 218 விண்ணப்பங்களும் பெப்ரவரி மாதத்தில் 258 விண்ணப்பங்களும் மார்ச் மாதத்தில் 409 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் யாவும் கொழும்பு தேசிய ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் யாவும் கொழும்பில் இருந்து எமது திணைக்களத்துக்கு அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தஅடையாள அட்டைகள் யாவும் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். -162

## இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு வாரமாக எழுச்சிபூர்வமாக மேற்கொள்ளப் பட்டது. அதன் வடிவம் இன்று மிகப்பெரும் பேரணியாக அமையுமெனவும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்பேரணியில் கலந்துகொள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேதினத்தையொட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் அலங்காரவளைவுகள், எழுச்சிப் பதாகைகள், கொடிகள் மற்றும் வர்ணக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன, இப்பேரணியில் அணிதிரளக் கோரும் ஒலிபெருக்கி வாகனங்கள் மக்களை தினமும் அழைத்த வண்ணம் உள்ளன.

இன்றைய பேரணியில் அரசு தனியார் துறையினரும், சகல தரப்பு தொழிலாளர்களும், சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களும்கலந்துகொள்ளவும் ஏனையவற்றுக்கும் சகலஏற்பாடுகளும் வெகுசிறப்பாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. 157-சி

## ஜனதிபதி சந்திரிகா நாடு திரும்பினர்

(கொழும்பு)

பாரிஸில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்ட தில் பங்கு பற்றிவிட்டு ஜனதிபதி சந்திரிகா நேற்றுக்காலை நாடு திரும்பினர்.

யாழ்ப்பாணத்தில் அவ்ரோ விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்ட தகவல் ஜனதிபதி சந்திரிகாவுக்கு உடனடியாக பாரிஸிற்கு அறிவிக்கப் பட்டபோது அவர் தமது விஜயத்தை இடை நடுவில் நிறுத்தி நேற்று மாலை நாடு திரும்புவார் என எதிர்பார்க்கபட்டது.

எனினும் அவர் நேற்றுக் காலையே தனது உதவியாளர்கள் சகிதம் நாடு திரும்பினர். -க-சி

## 'மாகோ' உடன் திரும்பியது

(நெல்லியடி)

நிலாவரைப் பகுதியில் அவ்ரோ விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதையடுத்து பருத்தித் துறை துறைமுகத்தில் மண்ணெண்ணை இறக்கிக்கொண்டிருந்த மாகோ கப்பல், படையினரின் உத்தரவின்பேரில் நேற்றுமுன்தினம் காலை 11-30 மணிக்கு காங்கேசன்துறைக்கு அவசரமாக கொண்டுசெல்லப் பட்டது.

எனினும் இக்கப்பல் மீண்டும் நாளை செவ்வாய் காலை பருத்தித்துறைக்கு வந்துசேருமென துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (160-சி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B 1-3613,